D
V211, 3;'NA6.
N96.1.3
2-18 ;06.

வெளியீடு 5-12-96 Issued 5-12-96

443/97

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 24, 1996 – தொகுதி 1 – எண் 3

Friday the 24th May, 1996 – Volume 1 – No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

24-5-1996

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. இரங்கற் குறிப்புகள்—

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து 67 - 68

2. இரங்கல் தீர்மானங்கள்—

(அ) திருமதி இராணி அண்ணாதுரை, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து. 68 - 69

(ஆ) திருமதி ஜானகி இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மறைவு குறித்து. 69

3. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— 70

24766.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வைகாசி 11, தாது — திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 மே 24, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு "

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கற் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு.எம்.ஆர் இராமச்சந்திரன் அவர்கள் 5-3-1996 அன்றும், திரு. ஏ.கே. சுப்பையா அவர்கள் 13-5-1996 அன்றும் மறைவுற்றார்கள் என்பதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை அன்றைய செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஏ.கே. சுப்பையா அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை அன்றைய தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தனித் தொகுதியிலிருந்தும், 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கோட்டூர் தனித் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறையும், ஆக மொத்தம் நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவினால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த அப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திருமதி இராணி அண்ணாதுரை, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் தீர்மானம், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திருமதி இராணி அண்ணாதுரை அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"தமிழகச் சட்டமன்ற மேலவையில் 1970 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு வரை சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியவரும், தமிழகத்தின் முன்னாள் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் துணைவியாருமான இனிய பண்பும் பாசமும் கொண்ட திருமதி இராணி அண்ணாதுரை அவர்கள் 6-5-1996 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை

ஆற்றொணாத் துயரமும் வருத்தமும் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

முற்பகல் 9-35

(ஆ) திருமதி ஜானகி இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த இரங்கல் தீர்மானம்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களது மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

"தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சராக இருந்தவரும், மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியாரும், எம்.ஜி.ஆர். அவர்களின் கலையுலக வாழ்விலும், பொது வாழ்விலும் பெரும் துணையாக விளங்கியவருமான முன்னாள் தமிழக முதல்வர் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்கள் 19-5-1996 அன்று தனது 73-வது வயதில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்வதோடு அவரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது."

இந்த இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் இப்பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை (25-5-1996) 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை காலை 9.37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

@2. 1996-ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

@ பக்கம் 71 முதல் 86 வரை இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

இணைப்பு

(பக்கம் 70-ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

Honourable Members of the Legislative Assembly,

I greet you, the members of the Eleventh Assembly, newly elected by the people of Tamil Nadu who have upheld the majesty of democracy through a peaceful and silent revolution and welcome you in the words of the great poet Bharathi:

"ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா—
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா!"

2. I have no doubt that all of you will extend your wholehearted and enthusiastic cooperation to this Government which is committed to fulfilling the expectations of the people who have, in a massive groundswell of support, given a mandate well beyond a simple majority.

3. The efforts of the Election Commission in framing and strictly enforcing guidelines for the proper conduct of elections without giving room for malpractices and with restrictions on expenditure has enabled the people of Tamil Nadu to peacefully and democratically ensure a change of Government.

4. Further reforms are needed in the electoral process. We have reached a situation where in the guise of independent candidates, democratic rights are being frivolously and perversely misused. This is the appropriate time to stress the need to evolve a national consensus, through discussions with all parties, on electoral reforms which balance democracy with disicpline.

5. This Government will continue to emphasize the need for Constitutional safeguards for the autonomy of the States and a federal structure at the Centre so that the unity and integrity of India are firmly established.

6. Despite the assurance of the Late Prime Minister of India, Pandit Jawaharlal Nehru that Hindi will not be imposed on Tamil Nadu, the long standing language problem is yet to be resolved. The policy of

this Government is that the only solution to the language problem is to make all the official languages of the States, official languages of the Union Government. If it is argued that this will take time, then, as a first step, this Government will work towards making Tamil, rich in literature and grammar and the oldest in the family of Dravidian languages, as one of the official languages of the Union Government.

7. I am happy to inform you that for the first time a separate Ministry for Tamil Official Language has been set up for taking vigorous action to extend the full usage of Tamil to all aspects of administration in our State within a specified time frame and to achieve the goal of " Tamil Every where and in Every Sphere". At the same time it will be ensured that the welfare of the linguistic minorities will not be adversely affected and will be fully protected.

8. This Government is committed to preserving and nurturing the principle of secularism and communal amity. It will ensure that all appropriate action will be taken immediately to instil fraternal feelings amongst the members of all religions and classes. Peace committees consisting of community elders and leaders of all parties will be formed in areas where they are required. I request the co-operation of people from all walks of life in preserving communal harmony.

9. In 1993, the Tamil Nadu Legislative Assembly had enacted a legislation to provide for the continuance of the 69% reservation in employment and educational institutions in the State. As a result of the unanimity of all political parties in Tamil Nadu in enacting this legislation and the co-operation of the all India political parties for including the Act in the Ninth Schedule, this Act had been included in the Ninth Schedule of the Constitution placing it beyond challenge in courts of law, by the Constitution 76th Amendment Act notified on 1st September 1994. However, the Supreme Court had ordered the creation of additional vacancies in engineering and medical colleges in the State to provide admission to those who would have got admission had the 50% limit on reservation been followed. Although the Tamil Nadu Act providing for 69% reservation had been included in the Ninth Schedule of the Constitution on 1st September 1994, because of the failure of the previous Government to clearly state this in the clarification petition filed in the Supreme Court on 23rd September 1994, the

Supreme Court ordered the implementation of only 50% reservation. A similar order was passed by the Supreme Court for the year 1995-96 also. This Government is committed to providing 69% reservation in employment and education to the Backward and Most Backward Classes, Scheduled Castes and Tribes and will pursue the matter vigorously in the Supreme Court.

10. This Government is greatly concerned about the threats from powerful anti-social elements, to the life and property of the people in the State, especially those living in suburban areas resulting in an atmosphere of insecurity and an increase in violent crime. It also notes with concern that the people's confidence in the police has been shaken. This Government will take appropriate action to end the sad situation of the protector preying on the protected and the misfortune of politics becoming a haven for those committing crimes. It will transform the police force into a people friendly and non-partisan force. A State Human Rights Commission will be set up to enquire into all allegations of violation of human rights.

11. The people have given a mandate for a clean and corruption free Government in this election. This Government is fully committed to providing good governance in keeping with the people's expectations. After a study of the draft legislation at the Centre and the laws in other States, suitable legislation will be enacted to set up the institution of an "Ombudsman" who will enquire into the allegations of corruption against all high dignitaries and officials.

12. I am happy to inform you that the commitment to the people to announce the dates for the local body elections in the first session of this Legislative Assembly will be fulfilled. This will alleviate the sufferings of the people living in villages, towns and cities who do not have any duly elected representatives in the local bodies to whom they can voice their demands for basic services and have them fulfilled. Adequate financial resources will be made available to the local self-Government institutions to fulfil their responsibilities based on the recommendations of the State Finance Commission.

13. This Government is keen on conducting elections to the co-operative societies at the earliest. During the previous regime, ineligible persons had been enrolled as members in many co-operative societies.

This Government considers that the elections to the co-operative societies should be conducted after deleting ineligible members and enrolling eligible persons as members. A further period of 3 months will be required for conducting the elections to the co-operative societies properly without any irregularities after deleting ineligible members and enrolling eligible persons as members. For this purpose the Government will immediately approach the High Court and announce the schedule for elections on the basis of the orders of the High Court.

14. It has been represented that the foodgrains sold in the Fair Price Shops against family cards are not distributed properly and if the commodities are not bought on the specified dates, anti-social elements misappropriate them for own selfish ends. To prevent this, it has been demanded that foodgrains be distributed to the people on any day convenient to them every month. It has also been demanded that irregularities such as underweighment and diversion of essential commodities for sale in the open market should be prevented. Accepting these demands this Government will take appropriate action.

15. This Government will make all efforts to usher in a second Green Revolution in the State. A scientific approach based on the specific requirements of agro climatic zones will be the focus of the agricultural policy. Specific emphasis will be placed on extending irrigation facilities to dry land areas to the extent possible, increasing the productivity of irrigated lands by revamping irrigation systems and promoting high value added floriculture and horticulture. Assured supply of electricity at preannounced, specified hours will be ensured. This Government will also take all measures to ensure that the interests of the Cauvery Delta farmers are fully protected. The matter will be vigorously pursued before the Cauvery Water Disputes Tribunal in order to reach an early final settlement to the dispute. Implementation of the Interim Orders of the Tribunal will also be pursued.

16. In the present economic context, Tamil Nadu, endowed with good infrastructure, well educated and skilled manpower, an international airport and several seaports should have been in the forefront of industrial development in the country. However, in the last 5 years the State has not been able to capitalise on its advantages. This Government will adopt an investor friendly approach and strive

enthusiastically to attract more industrial investment to Tamil Nadu. A special policy package for small scale entrepreneurs will also be introduced.

17. The Government will devote full attention to the protection of the environment. Immediate steps will be taken to prevent pollution of rivers and waterways by industrial units. The pollution hazard posed by tanneries in the State is a serious problem. At the same time, the tanneries provide employment to a large number of people. Therefore, the issue will have to be tackled from both the human welfare and the environment points of view. A solution wherein, farmers' lands and public drinking water are not polluted and at the same time the livelihood of the workers is not adversely affected, will be found through tripartite discussions, initiated by the Government.

18. The Urban Development and Housing sector will be accorded due importance. The traffic congestion in the major cities like Madras and Madurai will be relieved by the construction of ring roads. In Madras city, action will be taken socn to shift the wholesale vegetable market to Koyambedu. I am glad to announce that a sum of Rs.200 crores will be allotted for meeting the infrastructure needs of Madras Metropolitan Area and a total amount of Rs.100 crores will be allotted to meet the infrastructure requirements of Madurai, Coimbatore, Tiruchirapalli, Tirunelveli and Salem municipal corporations.

19. This Government will ensure that there is no habitation without protected drinking water supply in the State. Steps will also be taken to provide protected drinking water supply to all the primary schools in the State. I would like to convey the good news that following the discussions the Hon'ble Chief Minister of Tamil Nadu, Thiru M. Karunanidhi had with the Hon'ble Chief Minister of Andhra Pradesh, Thiru N. Chandrababu Naidu, Krishna water will reach Madras city before the end of this year.

20. This Government will accord the highest priority to the provision of quality basic health care and medical services in the State. In order to provide uninterrupted basic medical care in the rural areas, it will be ensured that medical officers work properly in all the primary health centres.

218766

21. This is the Government of the poor and middle classes following the path shown by Arignar Anna. That is why soon after assumption of office, this Government waived ground-rent benefiting one crore and twenty five lakh persons. Similarly, in the areas affected by drought due to the failure of the North East Monsoon last year, remission of land revenue and appropriate debt relief will be given to the farmers. The District Collectors have been directed to speed up the drought relief works on a war footing. To review the situation and to intensify the works further a conference of District Collectors, presided over by the Hon'ble chief Minister, will be held in the first week of June.

22. A Progressive Education Policy will be formulated with a focus on the needs of the 21st Century. Upgrading the quality of education at all levels and promotion of computer literacy will be the main thrust areas of this policy. This Government will place the highest emphasis on ensuring that all children in the age-group of 6 to 11 years are enrolled and retained in primary schools. At the secondary level, efforts will be made to improve science education by equipping higher secondary schools with full-fledged laboratories.

23. This government is committed to providing an effective administration which is responsive to the needs of various sections of the public, such as farmers, weavers, workers and traders, and to increase employment opportunities. The "Manu Needhi Thittam", which enabled the people to meet officials at different levels easily to represent their grievances and to get them redressed, was introduced in 1969 for the first time in India only by this Government. I am glad to inform this House that this scheme, which was given up in the intervening period, will be revived.

24. The Tamil Nadu Legislative Council, with a 65 year old history was a shining repository of ideas derived from the intellect and experience of several scholars. As you are aware, the Council which was useful in formulating Government's policies, schemes and laws in a proper manner was abolished in 1986. Necessary legislation will be introduced in this House to revive this historic and august Council.

25. The revolutionary poet Bharathidasan said, "Just as you can see your path through your eyes, a nation achieves progress through

its women", Keeping this in mind this Government, when it held office earlier, had introduced many schemes for the benefit of women including property rights for women, 30% reservation in employment, setting up of a women police force, free education for poor women upto the degree level, marriage assistance grants for poor women who have studied upto Class VIII and maternity benefit for pregnant women. The Government will remove the slackness in the implementation of these schemes which came about during the intervening period, and will further expand them. I am glad to inform you that the Government will also endeavour to explain the ills of drinking by involving a thousand women, on payment of appropriate wages, in each district in prohibition propaganda.

26. This Government fully recognises the importance of the role of the employees of Government departments, public sector undertakings and various quasi-Government organisations in the effective implementation of schemes and programmes. The welfare of Government employees will therefore be accorded due importance. The State Government employees will be extended the same pay scales as those fixed for Central Government employees based on the recommendations of the Central Pay Commission. The recruitment of teachers will be made only through employment exchanges. By enlisting the co-operation of Government employees, this Government will ensure that the benefits of various schemes and programmes reach the people quickly and without any leakages.

27. You have the opportunity to serve the country and its people through this august Assembly. I conclude this address in the firm belief that you will conduct your debate in an enlightened manner that will add lusture to the democratic ethos, transform this House into a garden where good ideas blossom for the removal of poverty and the well being of the country and maintain the ideals of duty, dignity and discipline.

Vanakkam.

இணைப்பு

(பக்கம் 70-இல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே!

தமிழ்நாட்டு மக்கள் ஓர் அமைதி நிறைந்த மௌனப் புரட்சியை நடத்தி, ஜனநாயக மாண்பினைப் பாதுகாத்ததின் காரணமாக இந்தப் பதினோராவது சட்டப் பேரவையின் உறுப்பினர்களாகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்கள் அனைவரையும்

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா -
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா!"

என மகாகவி பாரதியின் கவிதை வரிகளில் வரவேற்று வாழ்த்துகிறேன்.

2. பெரும்பான்மை எனும் குறிப்பிட்ட எல்லைக்கோட்டையும் கடந்து மக்களின் மகத்தான எழுச்சி வெள்ளத்தினால் கிடைத்துள்ள இந்த வெற்றியை அளித்துள்ள மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ள இந்த அரசுக்கு உங்களின் அன்பானதும் அக்கறையுடையதுமான ஆர்வமிகு ஒத்துழைப்பு கிடைக்குமென்பதில் எனக்குச் சிறிதும் அய்யமில்லை.

3. சிக்கனமாகவும், முறைகேடுகளுக்கு இடமளிக்காத வகையிலும், சீராகத் தேர்தல் நடைபெற விதிமுறைகளை வகுத்து அவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்திட, தேர்தல் ஆணையம் எடுத்த முயற்சிகள், ஜனநாயக முறையினால் மட்டுமே அமைதியாக ஏற்படுத்தக் கூடிய ஆட்சி மாற்றத்துக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்பட்டுள்ளது.

4. தேர்தல் முறையில் மேலும் தேவைப்படுகிற சீர்திருத்தங்கள் பல இருக்கின்றன. ஜனநாயகம் வழங்கும் உரிமையை வேடிக்கையாகவும், விபரீதமாகவும், சுயேச்சை வேட்பாளர்கள் என்ற பெயரால் பயன்படுத்திக் கொள்கிற ஒரு நிலை வளர்ந்துள்ளதைக் கட்டுப்படுத்தி ஜனநாயகமும் கட்டுப்பாடும் காத்திடும் வண்ணம், அந்தச் சீர்திருத்தங்கள் அமைந்திட அனைத்துக் கட்சிகளுடன் கலந்து, நாடு தழுவிய அளவில் கருத்து உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்ட இது தக்க தருணமெனக் கருதுகிறேன்.

5. இந்திய நாட்டின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும், உறுதியும் வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கு ஏற்ப, மாநிலங்களுக்குச் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்ட அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பை இந்த அரசு, தொடர்ந்து வலியுறுத்தும்.

6. தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படமாட்டாது என்ற மறைந்த பிரதமர் பண்டித நேரு அவர்களின் உறுதிமொழி இருந்தபோதிலும் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்து வருகிற மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி, மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவது தான் என்பது இந்த அரசின் மொழிக் கொள்கையாகும். அதற்குக் காலம் தேவைப்படுமென்ற வாதம் வைக்கப்படுமேயானால் திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும் சிறப்புப் பெற்றதும் இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

7. நமது மாநிலத்தில் அனைத்து நிருவாக நடைமுறைகளிலும் குறிப்பிட்ட கால அளவுக்குள் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்துவதற்கு முனைப்பான பணி மேற்கொள்ளப்படுவதற்கும் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற ஏற்றமிகு நிலையை உருவாக்குவதற்கும் தமிழ் ஆட்சி மொழித் துறை அமைச்சகம் ஒன்று முதல் தடவையாக தனியாகவே அமைக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்: அதே சமயத்தில் மொழிச் சிறுபான்மையினரின் நலன்களுக்கு எந்தக் குந்தகமும் விளையாமல் பாதுகாக்கப்படும் எனவும் உறுதியளிக்கிறேன்.

8. சமயச் சார்பின்மைக் கொள்கையையும் சமுதாய நல்லிணக்கத்தையும் போற்றிப் பேணுகின்ற இந்த அரசு, அனைத்து மதத்தினரும் அனைத்து வகுப்பினரும் ஒரு தாய் மக்கள் என்கிற உணர்வு தோன்றி நீடித்து நிலைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை, விரைந்து செயல்படுத்துவதுடன், தேவைப்படும் பகுதிகளில் எல்லாம் சமூகப் பெரியவர்களையும் அனைத்துக் கட்சி முன்னோடிகளையும் கொண்ட அமைதிக் குழுக்களை அமைத்துப் பணியாற்றும் என்ற உறுதிமொழியை அளிப்பதுடன், அனைத்துத் தரப்பு மக்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

9. 1993-ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும், 69 சதவீத இடஒதுக்கீட்டைத் தொடருவதற்கு வகை செய்ய சட்டம் ஒன்றை இயற்றியது. அச்சட்டத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுத்த தமிழகக் கட்சிகள் அனைத்தும் மற்றும் அனைத்திந்தியக் கட்சிகளும் அச்சட்டத்தை அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்க ஒத்துழைத்து, அதன் காரணமாக, 1-9-1994-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட 76-ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் வாயிலாக, நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத வகையில், அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் இது சேர்க்கப்பட்டது. எனினும் 50 சதவீத ஒதுக்கீடு

பின்பற்றப்பட்டிருந்தால், எவருக்கெல்லாம் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைத்திருக்குமோ அவர்களுக்கெல்லாம் இடம் வழங்கும் வகையில் இம்மாநிலத்தில் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடங்களை உருவாக்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டம் 1-9-1994-லேயே அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர 'அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும்கூட, 23-9-94 அன்று அன்றைய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விளக்க மனுவில் இதுபற்றித் தெரிவிக்கத் தவறிவிட்ட காரணத்தால், உச்சநீதிமன்றம் 50 சதவீத ஒதுக்கீட்டையே நிறைவேற்ற உத்தரவிட்டது. 1995-96 ஆம் ஆண்டிற்கும் இதே போன்ற ஆணை ஒன்றை உச்சநீதிமன்றம் பிறப்பித்தது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும், 69 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்து உச்சநீதிமன்றத்தில் முனைப்புடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. நமது மாநிலத்தில், குறிப்பாகப் புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீது இருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு மிகுந்த கவலையுடன் கவனித்து, வேலியே பயிரை மேயும் வேதனையைத் தடுத்து நிறுத்தவும் - குற்றங்களைப் புரிய "அரசியல்" என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவலநிலையை அறவே போக்கவும் - காவல் துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய "மாநில மனித உரிமைகள் ஆணையம்" அமைக்கப்படும்.

11. தூய்மையான ஊழலற்ற ஆட்சிக்கு இத்தேர்தலில் மக்கள் தங்கள் பேராதரவைத் தந்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நல்லாட்சி வழங்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. உயர் பதவியிலுள்ளோர், அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்ய "ஆம்புட்ஸ்மென்" என்று சொல்லப்படும் விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்க மத்தியிலும், மற்ற மாநிலங்களிலும் முறையே உள்ள சட்டமுன்வடிவை [illegible]ங்களையும் பரிசீலித்து உரிய சட்டம் இயற்றப்படும்.

12. சிற்றூர், [illegible] நகர் [illegible] பகுதிகளில் வாழ்கிற மக்கள், தங்களின் அடிப்படைத் [illegible] களை எடுத்துக் கூறி

நடவடிக்கை எடுக்கப்படும். சென்னைப் பெருநகரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய இருநூறு கோடி ரூபாயும், மற்றும் மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம் ஆகிய மாநகர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மொத்தமாக நூறு கோடி ரூபாயும் ஒதுக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

19. இந்த மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீரில்லாத குடியிருப்புப் பகுதி இல்லை என்ற நிலை உருவாக்கப்படும். மற்றும் தொடக்கப்பள்ளிகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளைச் செய்துகொடுக்க இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்கும். அண்மையில் ஆந்திர மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. சந்திரபாபு நாயுடு அவர்களுடன் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசியதைத் தொடர்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நீர் வந்து சேரும் என்ற இனிய செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

20. இந்த மாநிலத்தில் மக்களுக்குத் தரமான அடிப்படை சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளை அளிக்க இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். கிராமப்புறங்களில் அடிப்படை மருத்துவ வசதி தடையின்றிக் கிடைத்திட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் முறையாகப் பணியாற்றுவது உறுதி செய்யப்படும்.

21. இது அறிஞர் அண்ணா வழியைப் பின்பற்றி நடைபெறும் ஏழை நடுத்தர மக்களின் அரசு. அதனால்தான் இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் மக்கள் பயன்பெறக் கூடிய அளவிற்குத் தரை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்த காரணத்தினால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டு உரிய கடன் நிவாரணமும் வழங்கப்படும். வறட்சி நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்தப்பட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். இதுபற்றி மேலும் ஆய்வு செய்து விரிவான பணிகளைத் தீவிரப்படுத்தி நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் ஜூன் திங்கள் முதல் வாரத்தில் நடைபெறும்.

22. 21-ஆம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் முற்போக்குக் கல்விக் கொள்கை வகுக்கப்படும். அனைத்து நிலைகளிலும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் கணிப்பொறி கல்வி அளிக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்த அரசு, ஆறு முதல் பதினோரு வயது வரையிலான சிறார்கள் அனைவரும் தொடக்கப் பள்ளிகளில்

சேர்க்கப்பட்டு தொடர்ந்து கல்வி கற்பிக்கப்படுவதை உறுதி செய்ய உயர் முன்னுரிமை அளிக்கிறது. மேனிலைப் பள்ளிகளில் அனைத்து வசதிகளும் கொண்ட ஆய்வுக் கூடங்கள் அமைப்பதன் மூலமாக அறிவியல் கல்வியை மேம்படுத்த முயற்சி எடுக்கப்படும்.

23. விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள் போன்ற பல்வேறு பிரிவு மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து நிறைவேற்றுகின்ற செம்மையான நிர்வாகத்தை அளிக்கவும் வேலைவாய்ப்பைப் பெருக்கவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. மக்கள் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளை எளிதில் சந்தித்து தங்களுடைய குறைகளை எடுத்துரைத்து அக்குறைகளைக் களைந்திட வழிவகை செய்யும் மனு நீதித் திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக இந்த அரசினால்தான் 1969-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இடையில் கைவிடப்பட்ட அந்தத் திட்டம் மீண்டும் செயலாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

24. 65 ஆண்டுகாலம் வரலாறு படைத்த தமிழகச் சட்டமன்ற மேலவை, மேதைகள் பலரின் மேலான கருத்துக்கள் இடம் பெற்று அறிவு, அனுபவம் ஆகியவற்றின் எண்ணக் கருவூலமாக ஒளிவிட்டதாகும். அரசின் கொள்கைகளையும், அதன் திட்டங்களையும், சட்டங்களையும் செம்மையாக வடிவமைப்பதற்குப் பெரிதும் பயன்பட்டு வந்த அந்த அவை 1986 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டதை அறிவீர்கள். தொன்மை வாய்ந்ததும் புகழ்மிக்கதுமான அந்த அவையை மீண்டும் அமைத்திடுவதற்கு ஏற்றதொரு சட்டம் இம்மன்றத்தில் உங்களின் ஒப்புதலுக்காக வைக்கப்படும்.

25. "கண்களால் வழி காண முடிவதைப்போல பெண்களால் நாடு முன்னேறக் கூடும்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அதனை மனத்தில் பதித்து இந்த அரசு முன்பு பொறுப்பேற்றிருந்த காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை, வேலைவாய்ப்புகளில் முப்பது சதவீதம், பெண் காவலர் படை, ஏழைப் பெண்களுக்கு இளங்கலை பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி, எட்டாவது வரை படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி நிதி, கருவுற்ற மகளிருக்குப் பேறுகால நிதி உதவி எனப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இடைக்காலத்தில் அதில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி அத்திட்டங்களை விரிவுபடுத்துவதுடன் மேலும் மாவட்டத்துக்கு ஆயிரம் பெண்களை, உரிய ஊதியம் வழங்கி, மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தி, குடியினால் வரும் கேடுகளை விளக்கிட, இந்த அரசு முயற்சி மேற்கொள்ள இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

26. திட்டங்களையும், திட்டப் பணிகளையும் திறம்பட செயல்படுத்துவதில் அரசுத் துறைகள், அரசுத் துறை நிறுவனங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்களது பங்கின் முக்கியத்துவத்தை இவ்வரசு முழுவதும் உணர்ந்துள்ளது. எனவே, அரசுப் பணியாளர்களின் நலனுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதங்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும். ஆசிரியர் நியமனங்கள், மீண்டும் வேலைவாய்ப்பகங்கள் வாயிலாகவே மேற்கொள்ளப்படும். இத்தகைய அரசுப் பணியாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதன் மூலம் பல்வேறு திட்டங்கள், திட்டப் பணிகளின் பயன்கள் எவ்வித விடுபாடுமின்றி மக்களுக்கு முழுமையாகவும் விரைந்தும் கிடைத்திட வழி காணப்படும்.

27. நாட்டுக்கும், மக்களுக்கும் நற்றொண்டாற்றிட இந்தப் பேரவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றுள்ள நீங்கள், ஜனநாயக மாண்புக்கு மேலும் ஒளி சேர்க்கும் வகையில் நாடு வாழவும், நலிவு நீங்கவும் நல்லதோர் கருத்துக் குலுங்கும் சோலையாக இந்த மாமன்றத்தை ஆக்கிக் கொண்டு, அந்தச் செழுமையான கருத்துக்கள் செயலாக்கம் பெறத்தக்கவகையில் விவேகமிகு விவாதங்களை நடத்தி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றிடுவீர்கள் என்ற நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையுடன் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

D
V211,31 N96
N96.1.3
218766

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.